ஆர்ட் போஸ்ட்

# பறந்தால் படைக்கலாம்!

பழனியப்பன்



“தூரிகை வேண்டாம்... வண்ணங்கள் வேண்டாம். எல்லையற்ற ஒரு வரைபடம் வரைய ஒரு ஏவுகணையும் விமானமும் வேண்டும்'' என்று பேசும் இராம. பழனியப்பனின் பதிப்போவியக்கலை அறிவியலோடு அதிகம் சம்பந்தப்பட்டது.

தனது படைப்புகளை உருவாக்குவதற்கு இவர் தூரிகை, வண்ணங்கள், பென்சில், பேனா இவற்றை மட்டும் பயன்படுத்துவது இல்லை. அரக்கு முத்திரை, நூல், ரப்பர் ஸ்டாம்பு ஆகியவற்றிலிருந்து, டைரியிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகள் வரை அனைத்தையும் பயன்படுத்துகிறார் இவர். இதனாலேயே இவர் படைப்புகளைப் பார்க்கிற பார்வையாளன் 'இவை எவ்வாறு செய்யப்பட்டவை?' என்று வியக்கும்படியான விந்தைத் தன்மையை உணர்கிறான்.

கலை என்பது வெறும் அழகுணர்ச்சி மட்டும் அல்ல... வெறும் பார்வை சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல... கலை என்பதே ஒரு சிந்தனை! இப்படித்தான் தனது கலையைப் புரிந்துகொள்கிற பழனியப்பனின் சிறப்பு, இவரது பதிப்போவியங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடன் திகழ்வதுதான்.

பொதுவாகப் பதிப்போவியக் கலையில் 3, 4 பிரதிகள் எடுக்கப்படும்போது, அவை பெரும்பாலும் ஒரே மாதிரியாக இருக்கச் செய்வது வழக்கம். ஆனால், பழனியப்பன் இதிலிருந்து மாறுபடுகிறார்.

இதற்குக் காரணம் அடிப்படையில் இவர் காலம், இடம், வெளி ஆகியவை குறித்துச் சதா சிந்திப்பதுதான்.

“ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு நிமிடமும் மாறிக்கொண்டு இருக்கின்றன. இத்தகைய நிலையில் ஓவியத்திலும் ஒய்வு ஒழிச்சலின்றி மாறும் தன்மையை உணர்த்துவதற்காகவே நான் என் படைப்புகளை இவ்வாறு படைக்கிறேன்'' என்கிறார் பழனியப்பன்.

> ஓவியனுக்குப் படம் வரைய ஒரு குறிப்பிட்ட சதுரம் போதும் என்ற காலம் போய்விட்டது..

சென்னையிலுள்ள லலித்கலா அகாடமியின் ரிஜினல் சென்டரில் இருக்கும் பதிப்போவியப் பட்டறையில் பொறுப்பாளராக இருக்கும் பழனியப்பன், பதிப்போவியங்களை உருவாக்கும் செய்முறை மிகவும் கடினமானது.

வண்ண அச்சு மைகளை நிரப்புகிறார். தேவையற்ற அதிகப்படியான மைகளைக் காகிதம் மூலம் துடைத்து எடுத்து விடுகிறார். பிறகு இதற்கென உருவாக்கப்பட்டிருக்கும் பிரத்யேகமான பலவித உருளைகளில் – இவை கடினமாகவும் மென்மையாகவும் இருக்கிற பண்புகள் கொண்டவை – வண்ணங்களைப் பூசி தகட்டின்மீது உருட்டி தன் படைப்பின் அடிப்படையாக துத்தநாகத் தகட்டில் திராவகத்தால் அரிக்கப்பட முடியாத ஒரு ரசாயனப் பொருளால் தனது படைப்பின் அடிப்படை வடிவத்தை முதலில் வரைந்து கொள்கிறார். பிறகு திராவகத்தில் அதை அமிழ்த்துகிறபோது திராவகம் அந்தத் தகட்டின் பிற பகுதிகளை அரித்துத் தின்றுவிடும். இவ்வாறு பலமுறை அமிழ்த்தி எடுத்து தகட்டில் பலவித ஆழங்கள் கொண்ட கலைத்தன்மையுடைய பகுதிகளை ஏற்படுத்துகிறார். பிறகு இந்தத் தகட்டின் பள்ளங்களில் பல இருக்கிற அச்சுப் பதிவுகளை ஏற்படுத்துகிறார். இதன் பிறகு அந்தப் படைப்பைச் செய்யும்போது இருக்கும் மனோநிலைக்கு ஏற்ப அரக்கு முத்திரை, நூல், ரப்பர் ஸ்டாம்பு போன்ற பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தித் தன் படைப்புகளுக்கான தனித்தன்மையை உருவாக்குகிறார்.

சென்னைக் கலைக்கல்லூரியில் 5 ஆண்டு கலைக் கல்வியும் ஓராண்டு போஸ்ட் டிப்ளமா கல்வியும் பெற்றவர் இவர். இவரது படைப்புகள் எண்பதுக்கும் மேற்பட்ட கண்காட்சிகளில் பங்கேற்றிருக்கின்றன. அழைப்பின் பேரில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், தைவான், ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அகில உலகக் கண்காட்சிகளில் இவரது படைப்புகள் பங்கேற்றுள்ளன.

1990-ல் பிரபலமான டமரின்ட் நிறுவனத்தின் உயர்மட்டப் பதிப்போவியக் கலைக்கான அகில உலகப் பட்டறையிலும் நியூமெக்ஸிகோவின் ஆல்பகர்கியிலும் பங்கேற்றிருக்கிறார் இவர்.

தொடக்க காலங்களில் பழனியப்பன் மனித உருவங்களையும் இயற்கையின் எழில்மிகு காட்சிகளையும் ரசித்து, அவற்றை ஓவியங்களாகவும் படைத்து இருக்கிறார்.

1978-ல் ஒரு நாள் இவரை நவீனகாலத்துச் சிந்தனை ஒன்று தாக்கி அதை ஒரு ஓவியமாகச் செய்யத் தூண்டியது.

“எனது முதல் படைப்பூக்கம் மிக்க ஓவியம்'' என்று இவரால் குறிப்பிடப்படுகிற இந்தப் படைப்பில் படிகளைப் பற்றிய ஒரு கருத்து வைக்கப்பட்டிருக்கிறது. 1979-ம் ஆண்டு முதற்கொண்டு அறிவியல் சிந்தனைகள் இவர் படைப்புகளின் மீது தாக்கம் செலுத்தி வருகின்றன. கலையும் அறிவியலும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான் என்று இவர் கருதுகிறார்.

'மனிதனின் கண்டுபிடிப்புகளிலேயே உன்னதமானது விமானம்தான்' என்று சிறுவயதிலிருந்தே இவருக்கு நம்பிக்கை உண்டு. இதனால் இவர் விமானம் குறித்த காட்சிகளில் அதிகமாகத் தன்னை இழந்தார். மனிதன் அண்ட வெளியில் பறக்க வேண்டும் எனும் எண்ணம் இன்று நேற்று வந்தது அல்ல. “என்றைக்கு வானத்து நட்சத்திரங்களை வைத்துத் தன் தலையெழுத்தைக் கணிக்கத் தொடங்கினானோ அன்றே அவன் அங்கு மிதக்கத் தொடங்கிவிட்டான். அவற்றைத் தொட்டு அணைக்க வேண்டும் எனும் எண்ணமே இன்று நாம் காணும் விமானமும் ஏவுகணையும்'' என்று குறிப்பிடுகிறார் பழனியப்பன்.

1980-களில் 'பறத்தல் வரிசை' எனும் ஓவியங்களைச் செய்யத் தொடங்கினார். மனித சிந்தனை பிரபஞ்ச வெளியை பௌதீக ரீதியாகத் தொட்டதற்கான சான்றுதான், வானில் பறக்கும் ஆகாய விமானம் என்பதை விளக்கும் வகையில் இவை அமைந்தன. விமானத்தின் இறக்கை, மனிதனின் தலை, இயந்திரத்தனமான விவரணைகளுடன் தீட்டப்பட்டன. 1983-களில் இந்த உருவரீதியான வெளிப்பாடு அரூபமாக மாறத் தொடங்கியது. விமானத்தை வரைவதற்குப் பதிலாக சில அம்புக்குறிகளும் குறியீடுகளும் எண்களும் மட்டுமே போதும் என்று ஆகிவிட்டது. இதற்குப் பிறகு முப்பரிமாணம் கொண்ட பொருளுக்கு நான்காவது பரிமாணமாக இயக்கம் என்பதையும் தன் படைப்புகளில் சேர்த்தார். இதையும் கடந்து அந்தப் பொருளுக்குள் இயங்கும் குணாம்சத்தையும் சேர்த்து ஐந்தாவது பரிமாணமாக வெளிப்படுத்தத் தொடங்கினார்.

உதாரணமாக – இவரது 'அந்நிய கிரகங்கள்' என்ற ஓவியத்தை எடுத்துக் கொண்டால், அந்த ஓவியத்தில் காட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு விதமாகச் சுழல்கிறது. அந்நிய கிரகங்களை நாம் யாரும் பார்த்தது இல்லை. ஆனால், அறிவியல்ரீதியாக நமக்கு இவை பற்றி கொடுக்கப்படுகிற பல வண்ணங்கள் வெறும் அனுமானங்கள். இவை பற்றிய ஒரு வண்ணப்படத்தைக் கறுப்பு வெள்ளைப்படமாக வெளியிடுகிறபோதேகூட அதுபற்றிய அனுமானம் மாறிவிடுகிறது. இவ்வாறு ஒரே கிரகத்துக்கு பலவிதமான மனோசித்திரங்கள் உண்டு என்பதை இந்த ஓவியத்தின் மூலமாக பழனியப்பன் நமக்கு உணர்த்துகிறார்.

“வானவெளியில் பறக்கும் ஒரு மனிதனால்தான் முப்பரிமாணம் கொண்ட ஒரு வரைபடத்தை எல்லையற்ற வெளியில் எல்லையற்றதாகச் செய்ய முடியும்'' என்று குறிப்படுகிற ஓவியர் பழனியப்பனின் கலை ஈடுபாடு அளவிட முடியாதது. அவரது கலை ஈடுபாட்டின் வேகத்தைப் புரிந்துகொள்ள அவரது இந்த வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும்.

“ஓவியனுக்குப் படம் வரைய, அவன் சிந்தனையைத் தீட்ட ஒரு குறிப்பிட்ட சதுரம் போதும் என்கிற காலம் சென்றுவிட்டது. இன்று வரைபடம் செய்வதற்கு இந்தப் பிரபஞ்சம் முழுவதும் வேண்டும்.''

– இந்திரன்

'அந்நிய கிரகங்கள்'

